# ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி மஹா ஸ்வாமிகள்

சாந்திப்பிரியா

 

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி மஹா ஸ்வாமிகளின் சந்ததியினர்

தமிழகத்தில் பல சைவ மற்றும் வைஷ்ணவத் தலங்களை தன்னுள் வைத்திருக்கும் முக்கிய மாவட்டம் தாமிரபரணி நதி ஓடும் திருநெல்வேலி மாவட்டமாகும். ஆன்மீகம் மிக அதிக அளவில் ஊறுகின்ற பூமி அது. ஒரு கால கட்டத்தில் கிருஸ்துவ மற்றும் முஸ்லிம் மதத்தவர் தமது மதத்தை வேறுன்றச் செய்த இடம் அது. அப்படிப்பட்ட அந்த மாவட்டத்தில் பிறந்தவரே ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி மஹா ஸ்வாமிகள். அவருடைய முன்னோர்கள் அந்த நகரில்தான் வாழ்ந்து வந்தனர். திருநெல்வேலியில் உள்ள நெல்லையப்பர் சிவனாலயம் மிகவும் புகழ் பெற்ற ஆலயம். அந்த ஆலயத்தில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி ஸ்வாமிகளுடைய தாய் வழி உறவினரான கிருஷ்ணசாமி நாயக்கர் ஆலய அறங்காவலராக இருந்துள்ளார்.

நாயக்கர்கள் வானமாமலை என்ற வைஷ்ணவப் பிரிவை சேர்ந்தவர்கள். இன்று நாங்குனேரி என அழைக்கப்படும் இடத்தில் உள்ள ஆலயத்தில் ஆதிசேஷன் மற்றும் தம்முடைய மனைவிகளான பூதேவி, ஸ்ரீதேவியுடன் அமர்ந்திருக்கும் வானமாமலை பெருமாளை பூஜப்பவர்கள் வானமாமலை வைஷ்ணவர்கள். அந்த மடத்தினால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் நாயக்கர்கள் என்ற பிரிவினர். விஜய நகரப் பேரரசான கிருஷ்ணதேவராயரின் அரசு தமிழகத்தில் நன்கு கால் பதித்திருந்த கால கட்டத்தில் பல முக்கியப் பதவிகளை வகித்தவர்கள் அவர்கள். விஜய நகர பேரரசு வீழ்ந்தப் பின் நாயக்கர்கள் பல்வேறு இடங்களிலும் சென்று குடியமர்ந்தனர். அப்படி தமிழகம் வந்து குடியேறியவர்கள் திருநெல்வேலி

மாவட்டத்தில் அதிகம் உண்டு. அப்படி வந்து குடியேறியவர்களில் ஒரு பிரிவினர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி மகா ஸ்வாமிகளின் சந்ததியினர் ஆவர். அவர்கள் மெல்ல மெல்ல நிலச்சுவாந்தரர்களாகவும், பண்ணையார்களாகவும் மாறினர். அவர்களில் ஒருவரே பிரசன்ன லஷ்மண நாயக்கர் என்பவர். அவருக்கும் அவருடைய மனைவி கோதைவல்லித் தாயர் என்பவருக்கும் பிறந்தவர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி மகா ஸ்வாமிகளின் தந்தையான ஆதி நாராயணஸ்வாமி நாயக்கர்.



வைஷ்ணவர்களின் தலைமைப் பீடமாக இருந்த
இடத்தில் இருந்த ஆதிநாராயணஸ்வாமி ஆலயம்

தம்முடைய தந்தையின் மரணத்திற்குப் பிறகு அவர் அத்தைமார்களின் பராமரிப்பில் வளர்ந்து, ரவண சமுத்திரம் என்ற ஊரில் ஜாகீர்தாரராக வாழ்ந்து கொண்டு இரண்டு அக்ரகாரங்களை நிர்வாகம் புரிந்து வந்தார். ஒரு மிக முக்கியமான செய்தி என்ன எனில் அவர்கள் வாழ்ந்திருந்த இடம் வைஷ்ணவர்கள் நிறைந்த இடம் எனிலும், அங்குள்ள ஆலயங்கள் பலவற்றில் விஷ்ணு மற்றும் சிவன் இருவரும் வணங்கப்படுவது உண்டு. ஹரியும் சிவனும் ஒன்றே என்ற தத்துவத்தைக் காட்டும் சங்கரநாராயணர் ஆலயம் உள்ள இடம் அது. அதனால்தானோ என்னவோ அவர் வைஷ்ணவப் பிரிவை சார்ந்து இருந்தாலும் சிவனையும் வணங்கி வந்தவர் என்பதினால் சிவபெருமானுக்கு ஒரு ஆலயம் அமைத்தார். அந்த ஆலயத்திற்கு சிருங்கேரி மடத்தின் மகாஸ்வாமிகளான ஸ்ரீ சந்திரசேகர பாரதியையும் அழைத்து பூஜை செய்தார்.

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி மஹா ஸ்வாமிகளின் பெற்றோர் பெற்ற அதிசய அனுபவம்

ரவண சமுத்திரத்தில் வாழ்ந்து கொண்டு இருந்த ஆதி நாராயணஸ்வாமி-ரங்கநாயகி தம்பதியினருக்கு திருமணமாகி பல ஆண்டுகளுக்குப் பின் ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால் என்ன துரதிஷ்டமோ, அந்தக் குழந்தை நோய் வாய்ப்பட்டு இறந்துவிட்டது. அதனால் மனம் உடைந்து போன தம்பதியினர் தமது மனத் துயரை ஆற்றிக் கொள்ள பல திருத்தலங்களுக்கும் புனித யாத்திரையை மேற்கொண்டனர். அப்படிப்பட்ட யாத்திரை செய்து கொண்டு இருந்த பொழுது கன்யாகுமரியில் தமது குலதெய்வத்திற்கு பூஜைகள் செய்த பின் திரும்பி வந்து கொண்டு இருந்தனர். அப்பொழுது முன்பின் தெரியாத மூதாட்டி ஒருவர் அவர்களை தாமாகவே வழியில் சந்தித்து அவர்களை பழனிக்குச் சென்று முருகப் பெருமானிடம் ஒரு மண்டலம் தங்கி பிரார்தனை செய்யும்படிக் கூறிவிட்டுச் சென்று விட்டாள். ஆதி நாராயணஸ்வாமி தம்பதியினர் வந்தவர் யார், தம்மை எப்படி அவளுக்குத் தெரியும் என யோசனை செய்தபடி தம் நிலைக்கு வரும் முன்பே அந்த அம்மையார் எங்கோ சென்று விட்டாள். வந்தவள் யார் எனப் புரியவில்லை ! மனம் குழம்பியவர்கள் எது நடந்தாலும் நடக்கட்டும், அந்த மூதாட்டி கடவுளின் பிரதிநிதி போல நம்மிடம் வந்து கூறி இருக்கலாம் என நினைத்தபடி பழனிக்குச் சென்று ஒரு மண்டலம் தங்கி முருகனை ஆராதித்தனர்.

என்ன அதிசயம்! அந்த நேரத்தில் சிருங்கேரி மடத்தின் மகாஸ்வாமிகளான ஸ்ரீ சந்திரசேகர பாரதியையும் பல இடங்களுக்கும் யாத்திரை மேற்கொண்டப் பின் அங்கு வந்திருந்தார். அதைக் கேள்விப்பட்ட தம்பதியினர் உடனே சென்று அவரை தரிசிக்க அவர்களுக்கு விரைவில் ஒரு ஆண் குழந்தை பிறக்கும் என அவர் ஆசிர்வதித்தார். அது மட்டும் அல்ல அங்கு இருந்த பொழுது ஒரு நாள் இரங்கநாயகியின் கனவில் வெளியில் இருந்து வந்த ஒரு வேல் வயிற்றில் இறங்கியது போல கனவு வர பீதி அடைந்த நாராயணஸ்வாமி-ரங்கநாயகி தம்பதியினர் மீண்டும் ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளை சந்தித்து அந்தக் கனவு குறித்து விளக்கம் கேட்டனர். அவரோ அவர்களுக்கு எதிர் காலத்தில் ஒரு தவப் புதல்வர் பிறக்க இருக்கின்றார் என்பதை சமிக்கையாகக் காட்டும் கனவே அது எனவும் அது குறித்து எந்த விதமான கவலையும் பட தேவை இல்லை என்று கூறி அவர்களை திருப்பி அனுப்பினார்.

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி மஹா ஸ்வாமிகளின் பிறப்பு

அதன் பின் அவர்கள் தாமிரபரணி ஆற்றுக் கரையின் அருகில் இருந்த விக்ரமசிங்கபுரத்தில் குடியமர முடிவு செய்து அங்கு வந்து விட்டனர். காலம் ஓடியது. 1929 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இருபத்தி ஒன்பதாம் தேதியன்று அவர்களுக்கு மகர லக்னம், பூச நட்சத்திரத்தில் புதன் கிழமையன்று ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி மகா ஸ்வாமிகள் மகனாகப் பிறந்தார். அவர் பிறப்பும் மிகவும் விஜித்திரமான சூழ்நிலையில் அமைந்து இருந்தது. பாபநாசம் புனித ஆற்றில் நீராடச் சென்ற பொழுது ரங்கநாயகிக்கு இடுப்பு வலி ஏற்பட, ஆற்றின் பக்கத்தில் இருந்த ஒரு கட்டிடத்தில் சென்று அவர் அமர வைக்கப்பட்ட பொழுது அங்கேயே பிரசவம் ஆகி விட்டது. ஆக அந்த ஆண்டவன் தனக்கு சொந்த பந்தம் என்று எதையும் வைத்துக் கொள்ளாமல், வீட்டிலும் பிறக்காமல் அனைவருக்கும் சொந்தமான பொது இடத்தில் பிறந்தது வியப்பான செய்தி இல்லையா?

## குழந்தை பழனிசாமி ஆன கதை

பழனியில் ஸ்வாமியின் (கடவுள்) அருளினால் மகன் பிறந்ததினால் குழந்தையின் பெயரை சுவாமி என வைத்து அப்படியே அவரை அழைக்கலாயினர். அப்படி ஒரு பெயர் வைக்கக் இன்னொரு காரணம் சுவாமி மலை முருகன் பெயரில் இருந்த சுவாமி என்ற பெயரையே முருகப் பெருமானின் நினைவாக இருக்கட்டும் என வைத்தனர்.

நன்கு வளர்ந்து வந்த குழந்தை ஒரு முறை கண் திறக்காமல் சுய நினைவை இழந்து நல்ல காய்ச்சலினால் அவதிப்பட்டது. மூன்று மாதமாக தொடர்ந்த காய்சலை எந்த மருத்துவத்தினாலும் கட்டுப்படுத்த முடியவில்லை. பெற்றோர் மனம் கலங்கி நின்றிருந்த பொழுது ஒரு நாள் எவரும் அழைக்காமலேயே அந்த ஊரில் வாழ்ந்து கொண்டு இருந்தவரும், தத்தாத்திரேயர் வம்சாவளியைச் சேர்ந்தவருமான சித்த புருடரான அம்மாவாசை சாமியார் என்பவர் திடீர் என அவர் வீட்டிற்கு வந்து அந்த குழந்தை படுத்திருந்த அறைக்குள் நுழைந்தார. அந்த திகம்பர (நிர்வாண) சாமியார் அனைவரிடமும் விலகியே இருந்தார். எவருடனும் பழகுவதில்லை. மற்ற எந்த நாட்களிலும் உணவு அருந்தாமல் அம்மாவாசை தினத்தன்று மட்டுமே உணவருந்தியதால் அவருக்கு அம்மாவாசை சாமியார் என்ற பெயர் ஏற்பட்டு இருந்தது. குழந்தையின் நெற்றியில் சிறிது வீபுதியைத் தடவினார், பழனிசாமி, பழனிசாமி என மூன்று முறை கூவிவிட்டுச் சென்று

விட்டார். என்ன அதிசயம், கண்மூடிப்படுத்திருந்த குழந்தை கண் விழித்தது, காய்ச்சல் படிப்படியாக நின்றுவிட்டது. அன்று முதல் அந்த குழந்தையின் பெயர் பழனிசாமி என ஆயிற்று.

## முஸ்லிம் பெண்மணி அபுபக்கரும் பழனிசாமியும்

பழனிசாமி பெரியவனாகி வளரத் துவங்கியவுடன் கிருஸ்துவப் பள்ளி ஒன்றில் பணி புரிந்து வந்தராமசாமி சாஸ்தரி என்றவரிடம் பாடம் பயின்றார். பழனிசாமியின் வீட்டில் வயதான அபுபக்கர் என்ற தொண்ணூறு வயதான ஒரு முஸ்லிம் பெண்மணி வேலையில் இருந்தாள். முஸ்லிம் பெண்மணியாக இருந்தாலும் சமிஸ்கிருத மொழியில் புலமை பெற்றவர். இந்து மத இலக்கியங்களை நன்கு கற்றறிந்தவர். அவர் பழனிசாமிக்கு மகாபாரதம், ராமாயணம் மற்றும் பகவத் கீதை போன்றவற்றில் இருந்து பல தத்துவக் கதைகளை எடுத்துரைப்பார். அவர் வீட்டில் இருந்தவர்களிடம் பழனிசாமி பிற்காலத்தில் ஒரு பெரிய ஆன்மீகவாதியாக இருப்பார் என்ற கருத்தைக் கூறி வந்தார். யோகினி போலவே வாழ்ந்து வந்த அந்த மூதாட்டி மீது பழனிசாமிக்கு மிக்க மரியாதை உண்டு.

## பழனிசாமியும் நாய்குட்டி சாமியாரும்

வயது வளர வளர காரணம் தெரியாமல் பழனிசாமிக்கு சன்யாசிகள் மற்றும் சாதுக்களுடன் அதிக தொடர்ப்பு ஏற்படலாயிற்று. அதை அவரது வீட்டினர் விரும்பவில்லை. கண்டித்தனர், அடித்தனர். ஆனாலும் அவர் தன்னுடைய நடத்தையை மாற்றிக் கொள்ளவில்லை. அந்த நேரத்தில் பழனிசாமிக்கு ஜால வித்தைகள், மந்திர தந்திரங்களை நன்கு கற்றறிந்திருந்த நாய்குட்டி சாமியார் என்பவருடன் தொடர்பு ஏற்பட்டிருந்தது. வடநாட்டில் எங்கோ ஒரு மூலையில் இருந்து வந்திருந்த கபாலிகப் பிரிவைச் சேர்ந்த நாய்குட்டி சாமியார் பல நாய்கள் சுற்றிவர அந்த நாய்களுடன் அவர் ஊரில் சுற்றித் திரிவார். அதனால் அவருக்கு அந்தப் பெயர் ஏற்பட்டு இருந்தது. தந்திர மந்திர வித்தைகளை நன்கு தெரிந்தவர். அவரிடம் ஆன்மீக, ஞான போதனைகளை பழனிசாமி கற்று அறிந்திருந்தார். ஆனால் நாய்குட்டி சாமியார் அவருக்கு தந்திர மந்திர வித்தைகளை சொல்லித்தர விரும்பவில்லை. அவர்தான் ஒரு முறை பழனிசாமியிடம் ‘அவர் நேபாளத்தில் தனது குருவை சந்திப்பார்’ என்று கூறி இருந்தார். நாளாக நாளாக பழனிசாமிக்கு சாமியார்களுடனான தொடர்ப்பு அதிகரித்துக் கொண்டே இருந்தது.

## பழனிசாமியும் மஸ்தான் சாஹேப்பும்

பழனிசாமியின் வீட்டில் இருந்த மிக ஆசாரமான, ஆன்மீகப் பற்றுடைய அவருடைய பாட்டியே அவருக்கு நாய்க்குட்டி சாமியார் மற்றும், அம்மாவாசை சாமியாருடன் இருந்த நெருக்கத்தைக் குறைத்து அவரை திசை மாற்றியவர். ஆனாலும் அந்த ஊரில் கோரைப் பாய் முடைந்து வியாபாரம் செய்து வந்த காட்டுவா மஸ்தான் சாஹேப் என்ற ஒரு முஸ்லிம் நபருடன் பழனிசாமிக்கு நட்பு ஏற்பட்டது. ஊராருடைய மதிப்பைப் பெற்றிருந்தவரும் நேர்மையானவருமான மஸ்தான் சாஹேப் முஸ்லிம் மதக் கோட்பாடுகளைத் தவிற இந்து மதக் கோட்பாடுகளையும் திறமையாக அறிந்திருந்தார். அவருடன் ஏற்பட்ட பழக்கத்தின் பொழுது பழனிசாமி அதுவரை அறிந்திராத திருக்குரான் முதல் இந்து சமய தத்துவங்களையும் கற்றறிந்தார். மனம் இன்னம் முதிர்ச்சி அடைந்தது. அவர்கள் இருவரும் ஊருக்கு வெளியில் இருந்த ஆலமரத்தடியில் அமர்ந்து கொண்டு மணிக்கணக்காக ஆன்மீகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு இருப்பார்கள். அப்படி ஒரு நாள் பேசிக்கொண்டே இருந்த பொழுது மஸ்தான் சாஹேப் பழனிசாமியின் முதுகுப் பகுதியில் ஒரு இடத்தை அமுக்கினார். அவ்வளவுதான் பழனிசாமியின் குண்டலினி தட்டி எழுப்பப்பட அவர் தனது மனதில் பெரும் ஒளி எழும்பியதைக் கண்டார். அதன் பிறகு மஸ்தான் சாஹேப் பலமுறை பழனிசாமியிடம் 'உலகின் மாயையில் பற்று வைக்காதே, வீட்டைவிட்டு வெளியேறிச் சென்று உன் குருநாதரை சந்திக்க முயற்சி செய்' என அடிக்கடிக் கூறுவார். அதனால்தானோ என்னவோ பழனிசாமி ஒரு முறை எவரிடமும் சொல்லாமல் விக்ரமசிங்கபுரத்தில் வீட்டைவிட்டு வெளியேறி விட்டார்.

## உள்ளூரில் நிகழ்ந்த அதிசயம்

ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டு ஆத்தூர், பாளையங்கோட்டை, கயால்பட்டினம் போன்ற இடங்களில் சுற்றித் திரிந்தவர் பல முஸ்லிம் மக்களின் நட்பைப் பெற்று அவர்கள் வீட்டிலும் தங்கத் துவங்கினார். இரால் என்ற ஊரில் தங்கி இருந்த பொழுது அவர் தங்கி இருந்த வீட்டு வியாபாரியும் சொந்தக்காரருமானவருக்கு திடீர் எனக் காய்ச்சல் ஏற்பட்டு மருத்துவர்களும் கைவிட்டு விட்ட நிலையில் மரணம் அடையும் தருவாயில் அவர் சென்று விட்டார். அப்போது சந்தையில் சுற்றிக் கொண்டு இருந்த பழனிசாமியிடம் எவரோ ஒரு பெண்மணி வந்து ஒரு குறிப்பிட்ட இலை சாற்றை மரணத் தறுவாயில் இருந்த வியாபாரிக்குத் தருமாறு கூறிவிட்டுச் சென்று விட்டாள். பழனிசாமியும் அதை நம்பி அந்த இலையை

கண்டுபிடித்து அதில் இருந்து சாறெடுத்து மரணத் தருவாயில் இருந்த வியாபாரியின் வாயில் ஊற்ற அவர் கண்விழித்தார், காய்ச்சல் நின்றது. பூரண குணம் அடைந்தார். அந்த அதிசயச் செயலைக் கண்ட அனைவரும் வாயடைத்து நின்றனர். அவர் ஒரு தெய்வப்பிறவி என்பதை உணர்ந்து கொண்டு பல முஸ்லிம்கள் அவருடைய பக்தர்கள் ஆயினர். இப்படியாக பழனிசாமியின் தெய்வீகம் முதன் முறையாக வெளிச்சத்திற்கு வந்தது.

ஆஅ்த வியாபாரி ஏலக்காய், ஜாதிக்காய் போன்றவற்றை இலங்கைக்கு எற்றுமதி செய்து வியாபாரம் செய்து வந்தார். ஒவ்ஒரு ஆண்டும் இலங்கையில் ஆதாம் மலை எனப்பட்ட இடத்தில் இருந்த கண்டி நகருக்கு சென்று அவர் ஓய்வு எடுப்பது உண்டு. அப்படி ஒருமுறை அவர் இலங்கைக்குச் சென்ற பொழுது அவர் பழனிசாமியையும் தன்னுடன் இலங்கைக்கு அழைத்துச் சென்றார். அது போல பல நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தினரும் கண்டியில் இருந்தபடி பல்வேறு வியாரங்களில் ஈடுபட்டு வந்திருந்தனர். அவர்கள் மிகவும் நேர்மையானவர்கள், கடவுள் பக்தி மிகுந்தவர்கள், பரம்பரையான செல்வந்தர்கள். இலங்கை, பர்மா, மலேஷியா மற்றும் இந்தோனேஷியாவில் வங்கி வியாபாரத்தில் ஈடுபட்டு இருந்தனர். கண்டியில் இருந்து சுமார் முன்னூறு கல் தொலைவில் சிவனடிப் பாதம் என்ற இடம் உள்ள ஆதாம் மலை மிகவும் பிரபலமான புனித இடமாக இருந்தது. அந்த வியாபாரி பழனிசாமியை சிவனடிப்பாத இடத்திற்கு அழைத்துச் செல்ல எண்ணி இருந்தார். இந்து, முஸ்லிம் மற்றும் புத்த மதத்தினர் அனைவரும் எதோ ஒரு வகையில் அந்த சிவனடி பாத மலையை தம்முடைய மதத்தின் முக்கியமான இடமாக கருதிக் கொண்டு இருந்தனர்.

## வெளி நாட்டில் பழனிசாமிக்கு நிகழ்ந்த முதல் அதிசய அனுபவம்

பழனிசாமி அந்த வியாபாரியுடன் சென்றிருந்த பொழுது அவர்கள் தங்கி இருந்த விடுதி கண்டியில் இருந்த புத்தின் புனிதப் பல் இருந்த ஆலயத்தையும், மாவலிக் கங்கை என்ற ஆற்றையும் இணைக்கும் இடத்தில் இருந்தது. அந்த ஆற்றில்தான் அருகில் இருந்த ஆலய யானையை அழைத்து வந்து குளிப்பாட்டுவார்கள். பழனிசாமீ அங்கிருந்த பொழுது ஒருநாள் அந்த யானை மதம் பிடித்து பாகனைக் நசுக்கிக் கொன்ற பின் அனைத்து இடங்களையும் நாசம் செய்து கொண்டு கட்டுப்பாடு இன்றி ஓடியவண்ணம் இருந்தது. ஒரே ஓலம். தும்மையும் தாக்குமோ என பயந்து ஓடிய மக்களின் கூக்குரலைக் கேட்ட பழனிசாமி தன்னை அறியாமல் கீழே சென்றார். பழனிசாமி நடுரோட்டில் நின்றிருந்த

வேளையில் ஓடி வந்து கொண்டு இருந்த யானை அவரைக் கண்டதும் தன் வெறியை தணித்துக் கொண்டது. அது மட்டும் இன்றி அவர் முன் வந்து நின்றது, தும்பிக்கையால் அவர் தலையைத் தடவித் தந்தது. என்ன அதிசயம் ? ஒருவருக்கும் புரியவில்லை !



மக்கள் பெரிதும் வியப்புற்றனர். மதம் பிடித்த யானையை அவர் தம் சக்தியினால் அடக்கி விட்டார் என நினைத்து அவரை வணங்கலாயினர். அவரோ தமக்கு எந்த விதமான அமானுஷ சக்தியும் இல்லை என்று கூறியும் எவரும் அதை நம்பத் தயாராக இல்லை. தாம் அழைத்து வந்தவர் இவ்வளவு சக்தி பெற்றவரா என உள்ளூர் முஸ்லிம் மக்களுக்குப் பெரும் மகிழ்ச்சி. அன்றைய பழனிசாமி என்ற திருச்சி ஸ்வாமிகள் மனதில் பெரும் சிந்தனை. தம்மை சுற்றி என்னதான் நடக்கின்றது, ஒரு வேளை யானை முகத்தான் வினாயகர்தான் வந்து தம்மை ஆசிர்வதித்துச் சென்றாரோ , எதற்காக அவை நடக்கின்றன என்றெல்லாம் புரியவில்லை!

## வெளி நாட்டில் திருச்சி ஸ்வாமிகளுக்கு ஏற்பட்ட இரண்டாம் அதிசய அனுபவம்

அந்த செய்தி கண்டியில் இருந்த இளவரசருக்கும் தெரிய வந்தது. அவருடைய அரண்மனையில் ஒரு பிரச்சனை. அவர்கள் வீட்டில் விபரீதமான முறையில் ஒரு நல்ல பாம்பின் நடமாட்டத்தினால் அடிக்கடி அகால மரணங்கள் ஏற்பட்டு வந்தன. ஜோதிடர்களும், மந்திரவாதிகளும் எதையெதையோ கூற அதனால் மனக் கலக்கத்தில் இருந்தனர இளவரசரின் குடும்பத்தினர். அவர்களுக்கு சர்ப தோஷம் உள்ளது எனவும், ஒரு பாம்பு வந்து மரணத்தை ஏற்படுத்தி விட்டுச் செல்வதாகவும் அச்சம் இருந்தது. பழனிசாமி பற்றித் தெரிய வந்த இளவரசர், அவரை தம் அரண்மனைக்கு அழைத்தார். தம் பிரச்சனையைக் கூறி அதை நிவர்த்திக்குமாறு வேண்டினார். பழனிசாமீ அந்த அரண்மனையில் தங்கி இருந்து தியானம் செய்து வந்தார். தெய்வச் செயல்போல அவர் அரண்மனைக்கு வந்தப்

பின் அகால மரணங்கள் நின்றன. நல்ல பாம்பின் நடமாட்டமும் காணப்படவில்லை. அதனால் பழனிசாமியின் புகழ் இன்னமும் அதிகரித்தது. பலரும் அவரை தெய்வீகப் பிறவி எனவே நம்பத் துவங்கினர். கண்டியில் இருந்தபடி பல்வேறு வியாபாரங்களில் ஈடுபட்டு வந்திருந்த நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தினர் அவருடைய பக்தர்கள் ஆயினர். அவர்கள்தான் பின்னர் அன்றைய பழனிசாமி என்ற திருச்சி ஸ்வாமிகள் யாழ்பாணத்திற்குச் செல்ல காரணம் ஆயினர்.

## வெளி நாட்டில் பழனிசாமிக்கு ஏற்பட்ட மூன்றாம் அதிசய அனுபவம்

கண்டியில் இருந்து சுமார் முன்னூறு கல் தொலைவில் சிவனடிப் பாதம் என்ற இடம் உள்ள ஆதாம் மலைக்குச் செல்ல முடிவாயிற்று. அந்த ஏற்பாடுகள் அனைத்தையும் நாட்டுக்கோட்டை செட்டியார்களே செய்து இருந்தனர். அந்த இடத்திற்குச் செல்ல பஸ் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் பல முஸ்லிம் பெருமக்களும் கலந்து கொண்டனர். காலை புறப்பட்ட பஸ் அன்று மாலை மலை அடிவாரத்தை அடைந்தது. மறுநாள் காலை அனைவரும் கிளம்பி மலையேறிச் செல்ல முடிவு செய்து இரவு இளைப்பபாரினர். அன்றைய இரவு பழனிசாமி உறக்கம் இன்றி தவித்தார். நடு இரவு ஆன பொழுது தன்னை எவரோ அழைப்பது போல உணர்ந்தவர் கண் முழித்தார், தன் எதிரில் ஒரு அம்மையார் நிற்பதைக் கண்டார். தன்னுடன் உடனே கிளம்பி வெளியில் வருமாறும், மற்றவர் முழிக்கும் முன் மலையேறிச் சென்று விட்டுத் திரும்பி விடலாம் எனவும் ஆணையிட்டவளுடைய பின்னால் மகுடிக்கு மயங்கிய பாம்பைப் போல தன் நிலையை மறந்து சென்றார். மலை மீது நிறைய துாரம் ஏறிச் சென்றதும் அந்த அம்மையார் நின்றார்.



அவர் கையில் இருந்த ஒரு பொம்மையை பழனிசாமியின் கையில் கொடுத்து விட்டு, அவர் பிற்காலத்தில் வணங்க உள்ள தேவி தாமே என்பதை அவருக்கு உணர்த்திவிட்டு, அவரை குருவைத் தேடிக் கொண்டு இமய மலை அடிவாரத்துக்குச் செல்லுமாறும், அதன் பின்னர் கர்நாடக மானிலத்தில் தங்கி ஆன்மீக வாழ்வை தொடருமாறும் கூறிவிட்டு மறைந்து விட்டார். அதைக் கண்டு தன் நினைவை இழந்த பழனிசாமி அங்கேயே மயங்கிக் கிடந்தார். காலை முழிப்பு வர எழுந்தார். அந்த சம்பவம் அவருக்கு இனம் புரியாத அமைதியை தந்தது. தமக்கு ஆன்மீகக் கடமை உள்ளது என்பதை உணர்ந்தார்.

அதற்கு இடையே அவரைக் காணாமல் அவரைத் தேடிக் கொண்டு வந்தவர்கள் கண்களில் அவர் பட்டுவிட அவர் மீது அவர்கள் கோபமுற்றனர். எதற்காக எவரிடமும் கூறாமல் கிளம்பி வந்துவிட்டாய் என கேட்டதற்கு பழனிசாமி பதில் எதுவும் தரவில்லை. அவர் அவர்களிடம் நடந்த எதைப் பற்றியும் கூறவில்லை. மனம் தடுத்துவிட்டது. மௌனமாக இருந்தபடி அவர்களுடன் மலை உச்சிக்குச் சென்றவர் அங்கிருந்த பாத சுவட்டின் மீது சூரிய கிரணங்கள் விழுந்த பொழுது அது ஒரு சக்கரம் போல சுழல்வதைக் கண்டார். அந்த விஜித்திரத்தையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவில்லை. மூன்று மாதம் இலங்கையில் இருந்தபடி பல்வேறு இடங்களுக்கும் சென்ற பின் தமக்கு தேவி இட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆவலினால் உந்தப்பட்டு இந்தியாவிற்குத் திரும்பினார்.

## பழனிசாமியி திருச்சி ஸ்வாமிகள் ஆன கதை

இந்தியாவிற்குத் திரும்பியவர் திருச்சியில் தமது தாய் மாமன் வீட்டில் தங்கி இருந்தபடி திருச்சி தாயுமானவர் ஸ்வாமி ஆலயத்தில் இருந்த மலைக் குகைக் கோவிலில் தியானம் செய்து வந்தார். அவருக்கு அப்போது வயது இருபதாயிற்று. இருபது வயதானாலும் அவரிம் பல பக்தர்கள் வரத் துவங்கினர். இதற்கிடையில் வயதிற்கு வந்தவர் என்பதினால் பழனிசாமி மறுத்தும் அவருக்கு திருமணம் செய்ய அவருடைய உறவினர் முனைந்தனர். ஆனால் அவரோ தான் ஆன்மீக வழியில் சென்று விட்டதினால் திருமணம் செய்து கொள்ள முடியாது என மறுத்து வந்ததினால் எற்பட்ட குடும்ப குழப்பத்தை நிறுத்தி அந்த இக்கட்டான நிலைமையை சமாளிக்க, முன்னர் நாட்டுக்கோட்டை செட்டியார்கள் காரைக்குடி, ராமநாதபுரம், மதுரை மற்றும் புதுக்கோட்டை போன்றவற்றை உள்ளடக்கிய செட்டி நாட்டிற்கு வருமாறு விடுத்த அழைப்பை ஏற்று அங்கு செல்ல முடிவு செயதார். திடும் என ஒரு நாள் அவர்களுடன்

கிளம்பி சென்று விட்டார். அந்த செட்டியார்களே திருச்சியில் இருந்து பழனிசாமியை செட்டி நாட்டிற்கு அழைத்துச் சென்ற பொழுது அவருடைய பெயரை திருச்சி ஸ்வாமிகள் என மாற்றினர்.

நேர்மையான, கடவுள் பக்தி மிகுந்த அவர்கள் செட்டி நாட்டில் இருந்த பாழடைந்த சிவாலயங்களைப் புதுப்பிக்க நிறைய செலவு செய்தனர். அந்த இடங்களில் இருந்த செட்டியார்கள் தம் குடும்பங்களில் இருந்த புதிய தலைமுறை இளைஞர்களிடம் மறைந்து கொண்டிருந்த ஒழுக்கம், கடமை உணர்வு மற்றும் சமய நெறியை மீண்டும் புதுப்பிக்க எண்ணியே திருச்சி ஸ்வாமிகளை அங்கு வருமாறு அழைத்திருந்தனர். அவர் சிவனடிப்பாத மலையில் பெற்றிருந்த தெய்வ தரிசனச் சேதியும் அங்கு பரவி இருந்தது. ஆகவே திருச்சி ஸ்வாமிகளை தமது குருவாக, துறவியாக, வழி நடத்துபவராக அந்த செட்டியார்கள் ஏற்றுக் கொண்டு இருந்திருந்தனர். செட்டி நாட்டில் இருந்த அனைத்துப் பகுதிகளுக்கும் அவர் அழைத்துச் செல்லப்பட்டார்.

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி ஸ்வாமிகளின் செட்டிநாட்டு யாத்திரை

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி மகா ஸ்வாமிகளுடைய செட்டி நாட்டுப் பயணம் மிகவும் சுவாரஸ்யமானது. செட்டி நாட்டுப் பகுதிகளில் இருந்த பல ஆலயங்கள் பழுதடைந்து இருந்தன. அவற்றை சீரமைக்க கிராம மக்கள் எவரும் முன்வரவில்லை. பல ஆலயங்களில் பூஜைகளே நடைபெறாமல் நின்று இருந்தது. பல பிரிவுகளாக இருந்த மக்களிடையே இருந்த கசப்பு உணர்ச்சியும் பகைமையும்தான் அதன் காரணம். திருவிழாக்கள் கூட நடைபெறவில்லை. அங்கு சென்றவர் முதலில் பலதரப்பு மக்களையும் அழைத்துப் பேசினார், ஆலயங்கள் சீரமைக்கப்பட வேண்டியதின் அவசியத்தை எடுத்துக் கூறி அறிவுறைகள் செய்தார். முக்கியமாக செட்டியார்களில் பெரும் வசதி பெற்றவர்களிடம் அதை அதிகம் வலியுறுத்தினார். விளைவு ஆலயங்களைப் புதுப்பிக்க பலர் முன்வந்தனர். ஆகவே அதன் முன்னோடியாக பட்டமங்கலம் என அழைக்கப்பட்ட கிராமத்திற்கே முதலில் சென்றார். தொன்மையான பாடல் பெற்றத் திருத்தலமான அந்த கிராமத்தில் இருந்த ஆலயத்தில் சோமசுந்தரேஸ்வரரும், மீனாட்சி அம்மையும் குடி கொண்டு இருந்தனர். மாணிக்கவாசகர் போன்ற பெருமக்கள் வழிபட்ட திருச் சிலைக் கூட பழுதடைந்து இருந்தது. அவர் அந்த ஆலயத்திற்கு பலரையும் அழைத்து சென்று அதன் பெருமையை வினக்கிக் கூறி அதை புனரமைக்க நிதி திரட்டினார். குறித்த காலத்தில் ஆலயம் புதுமைப் பெற்று வழிபாடுகள் துவங்க பக்கத்து கிராமங்களில் இருந்த மக்கள் அவரை தம் ஊருக்கும்

வந்து ஆலய புனரமைப்புப் பணிகளை செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

அப்படிப்பட்ட அழைப்புக்களை ஏற்று அவர் கோவிலூர் மற்றும் ஆத்தங்குடியில் சில ஆலயங்கள், நாட்டரசன் கோட்டையில் கண்ணாத்தாள் ஆலயம், கல்லல் நற்கனியம்மன் ஆலயம், வெற்றியூர் அன்னபூர்ணி அம்மன் ஆலயம், பொன்னழகியம்மன் ஆலயம், நாகா சிவன், லோகநாயகி திருக் கோவில், விராயச்சிலை அடைக்கலம் காத்த அம்மாள் திருக் கோவில், ஒக்கூரில் பிள்ளையார் கோவில், சங்கந்தியில் சிவாலயம் ,காரைக்குடியில் கொப்புடையம்மன் போன்ற பல ஆலயங்களை சீர்படுத்தினர். அந்த நேரத்தில் காஞ்சி மடாதிபதியான சந்திரசேகர சரஸ்வதி ஸ்வாமியை சந்தித்து பல விளக்கங்களைப் பெற்றார். இப்படியாக பல இடங்களுக்கும் யாத்திரை செய்து கொண்டு இருந்தபடி பல மடத்தின் பீடாதிபதிகளையும் சந்தித்தார். ஒருமுறை உண்ணாமலை அம்மனை திருவண்ணாமலைக்கு வந்து தரிசிக்குமாறு அவருக்கு கனவில் தேவி ஆணையிட அதன்படி அங்கு சென்று அருள்திரு ஞான தேசிகருடன் சேர்ந்து உண்ணாமலை அம்மன் ஆலயத்தில் இருந்த இரதத்தை புதுப்பித்தார். அதன் பிறகு அந்த ஊரில் இருந்தபடி ஸ்ரீ வித்யா ஞானமும், சோடாஷ மகா மந்திரத்தையும் அறிந்து கொண்டார். ஆனால் அவர் மனதில் மீண்டும் மீண்டும் தனது குருவை இமயமலை அடிவாரத்தில் காணவேண்டும் என்ற ஆவல் வலுப்பெறத் துவங்க வட இந்திய யாத்திரையை மேற்கொள்ள முடிவு செய்தார்.

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி ஸ்வாமிகளின் வடநாட்டு யாத்திரை

ஸ்வாமிகளின் வயது இருபத்தி ஒன்பதான பொழுது அவர் வடநாட்டு யாத்திரையைத் துவக்கினார். யாத்திரைகள் மூன்று வகைப்படும். அவை குருவிற்காக செய்யும் குரு யாத்திரை, இறைவனுக்காகச் செய்யும் தேவ யாத்திரை, புனிதத் தலங்களை தரிசிக்கும் தீர்த்த யாத்திரை என்பன. ஆனால் ஸ்வாமிகள் அந்த மூன்று யாத்திரைகளையும் ஒன்று சேர்த்து தமது யாத்திரையைத் துவக்கினார். பல செட்டியார்கள் அவருக்குப் பண உதவி செய்ய, சிலர் அவருடன் பயணிக்கவும் முடிவு செய்ய ஸ்வாமிகளின் யாத்திரை சென்னையில் இருந்து துவங்கியது. முதலில் ஓங்கோல், அதன் பின் விஜயவாடா, குண்டூர், இராஜமகேந்திரவடம், என பல இடங்கள் சென்று அங்கிருந்து ஒரிசா மானிலத்தில் இருந்த பூரியை அடைந்தார். அங்கு ஜகன்நாதரை தரிசித்தப் பின் கல்கத்தா, பேளூர், தாரகேஸ்வர் ,வாரணாசி, அலஹாபாத், அயோத்தியா, கயா, ஹரித்துவார்,

என பயணம் செய்த பின் இமயமலை அடிவாரத்தில் இருந்த ரிஷிகேசம், பத்ரிநாத், கேதார்நாத் போன்ற இடங்களை சென்றடைந்தார்.

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி ஸ்வாமிகள் குருநாதரைக் கண்டார்

காசியில் தங்கி இருந்த பொழுது ஸ்வாமிகளுக்கு இன்னும் ஒரு விஜித்திர அனுபவம் ஏற்பட்டது. அவர் ஆழ்ந்த தியானத்தில் இருந்தபொழுது அவருடைய கனவில் விசாலாட்சி அம்மன் தோன்றினாள். அவர் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்த பொழுதே அந்த உருவம் மெல்ல மெல்ல மாறி தாடியுடன் கூடிய வயதான ஒருவராக மாறியது. அந்தக் காட்சி மீண்டும் மீண்டும் தொடர்ந்து தோன்றிக் கொண்டு இருக்க அந்த உருவத்தின் பிம்பம் அவர் மனதில் ஆழ பதிந்து விட, அவர் மனது நம்பிக்கை அடைந்தது. தான் சென்று அடைய வேண்டிய குருநாதர் அந்த உருவில்தான் இருப்பார் என்பதை விசாலாட்சி அம்மன் காட்டி உள்ளார் எனப் புரிந்து கொண்டார். மனதில் தன் குருநாதரைக் காண வேண்டும் என்ற ஆவல் இன்னம் வேகம் அடைய அவர் சில நாட்களிலேயே பட்னாவை அடைந்து அங்கிருந்து நேபாள நகரில் இருந்த காட்மாண்டுவை அடைந்தார்.



ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சிவபுரி பாபா

அங்கு பல இடங்களையும் சுற்றி ஆலயங்களை தரிசித்தப் பின் குகாம்பிகா என்ற குகைகோவிலை சென்றடைந்தார். அந்த ஆலயத்தில் இருந்த தேவியை தரிசித்துக் கொண்டு இருந்தவருக்கு அந்த தேவியை கண்டதே இல்லை என்று தோன்ற ஆச்சரியம் அடைந்தார். அப்போது முன்பின் அறிமுகம் இல்லாத ஒரு பிராமணர் அவரிடம் வந்து ஒரு பிரபலமான துறவியிடம் அவரை அழைத்துப் போவதாகக் கூறி காட்மாண்டுவில் இருந்து வெகு தொலைவில் இருந்த ஒரு காட்டின் நடுவில் இருந்த ஒரு மடத்திற்கு அவரை அழைத்துச் சென்றார். அவர் அழைத்துச் சென்ற துறவியே ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சிவபுரிபாபா எனப்பட்டவர். இருவருடைய கண்களும் நேருக்கு நேர் சந்தித்தன. தனக்கு குரு கிடைத்து விட்டார் என்பதை உணர்ந்தார் ஸ்வாமிகள்.

சிவபுரி பாபா 1826 ஆம் ஆண்டு கேரளத்தில் நம்பூத்ரிகள் குடும்பத்தில் தோன்றியவர். கோவிந்த நம்பூத்ரி என இளம் பருவத்தில் அழைக்கப்பட்டவர் தமது பதினெட்டாம் வயதில் துறவறம் மேற்கொண்டு விட்டார். முதலில் சிருங்கேரிக்குச் சென்று சன்யாச தீட்சை பெற

நினைத்தவர், என்ன காரணமோ பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து காஷ்மீரத்தை அடைந்து அங்கிருந்த சிவரத்னபுரி பாபா என்பவரிடம் தீட்சை பெற்றார். சுமார் நாற்பத்து ஐந்து ஆண்டுகள் வெளிநாடுகளில் பயணம் செய்த பின் காட்மாண்டுவிற்கு வந்து நிரந்திரமாகத் தங்கினார். அவர் 137 வயதுவரை உயிருடன் இருந்து மறைந்தார். அவரைதான் ஸ்வாமிகள் தரிசனம் செய்தார்.

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி ஸ்வாமிகள் சன்யாச தீட்சை பெற்றது

தம்மிடம் வந்தவரை மறுநாள் வருமாறுக் கூறிய ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சிவபுரிபாபா தம்முடைய கண்களில் இருந்து ஒளிப்பிழம்பை ஸ்வாமிகளுடைய கண்களுக்குள் செலுத்தி ஞானோபதேசம் செய்தார். இரண்டு இரவுகளை குருவுடன் கழித்தப் பின் மறுநாள் சம்பிரதாயமான நடைமுறையில் ஹோமம் முதலிய சடங்குகள் செய்யப்பட்ட சன்யாச தீட்சையைப் பெற்றார். அப்போது அவர் துறவிகளுக்குத் தேவையான அடையாளங்களையும், தண்டம், கமண்டலம் போன்றவற்றையும் விட்டுவிட்டு குருவிடம் தாம் இராமகிருஷ்ண பரமஹம்சரைப் போன்று வெள்ளை உடை அணிந்து கொண்ட துறவியாக இருக்க அனுமதி பெற்றார். சிவபுரிபாபா அவரை கன்னட நாட்டில் சென்று தம் வேலையைத் துவக்குமாறு ஆசி கூறி அனுப்பினார்.



தீட்சைப் பெற்றவுடன் ஸ்வாமிகள் அங்கிருந்துக் கிளம்பினார். பட்னா, டெல்லி முதலிய இடங்களுக்குச் சென்றவர் கன்னட நாட்டிற்குச் செல்லும் முன் கைலாய யாத்திரையை மேற்கொண்டார். அப்போது அவர் காலில் பாதரஷ்சை இன்றி, ஒரே போர்வையைப் போர்த்தியபடி, வெண்மையான உடையில்தான் சென்றார். அதுவே அவருடைய மனோ தைரியத்தை எடுத்துக் காட்டுவதாக இருந்தது. அந்த விஜயத்தின் பொழுதுதான் ஸ்வாமிகள் தமது வழிபாட்டு தெய்வமான இராஜராஜேஸ்வரியை அவள் அருகில் லஷ்மியும், ஸரஸ்வதியும் அமர்ந்து இருந்த நிலையில் காட்சியாகக் கண்டார். அதுவே பின்னர் ஓவியமாக தீட்டப்பட்டது. அவர் காட்சியாகக் கண்ட இராஜராஜேஸ்வரி தேவி அவருக்கு இலங்கையில் சிவனடிப்பாதத்தில் அந்த சன்யாசினி தந்த சிலையை ஒத்திருந்தது.

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி ஸ்வாமிகள்
## கைலாச ஆசிரமம் அமைத்த கதை

தமது குருவின் ஆணைப்படி கன்னட நாட்டிற்கு வந்து தங்கி இருந்த ஸ்வாமிகள் எந்த இடத்தில் ஆலயம் அமைப்பது என்ற எண்ணத்தில் ஆழ்ந்திருந்தார். இருந்தார். 1960 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் விடியற் காலை ஒரு சுபதினத்தில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மகா ஸ்வாமிகள் பெங்களூரில் இருந்து மைசூருக்கு காரில் பயணம் செய்து கொண்டு இருந்தார். பெங்களூர் நகர எல்லையைக் கார் கடந்த பொழுது ஆகாய வெளியில் மூன்று கருடன்கள் ஒரு இடத்தை வட்டமடிப்பதைக் கண்டார். அவை மூன்றும் அவருடைய கண்களுக்கு துர்கை, ஸரஸ்வதி மற்றும் இலஷ்மி உருவில் தெரிந்தது. சில நொடிதான், அவை மூன்றும் ஒன்றாக ஐக்கியமாகி அன்னை ஸ்ரீ இராஜராஜேஸ்வரியாகக் காட்சி தந்தன. காரை நிறுத்துமாறிக் கூறிய பின் தாம் கருடன்களைக் கண்ட தென் மேற்கு திசையில் செல்லுமாறுக் கூறினார். அது கெஞ்சனப்பள்ளி என்ற இடம்.

அவர் கண்ட காட்சியை அனைவரும் காண வேண்டும் என விரும்பியவர் கூறியபடி 1960 ஆம் ஆண்டு அதே இடத்தில் இருந்த நிலம் வாங்கப்பட்டு அற்புதமான திராவிடக் கலையில் பாண்டிய அரசுக் கால கட்டிடக் கலையையும், காஸ்யப சித்திர சாஸ்திரத்தையும் தழுவிய மாபெரும் ஆலயம் கட்டப்படத் துவங்கியது. 1978 ஆம் ஆண்டு ஆலயப் பணிகள் முடிவு பெற்றது.

ஆலயத்தின் கருவறையில் கம்பீரமாக அன்னை இராஜராஜேஸ்வரி ஒரு சிங்கத்தின் மீது தமது வலது காலை வைத்தபடியும், இடது காலை ஒரு தாமரை மலர் மீதும் வைத்திருக்கும் கோலத்தில் காட்சி தருகின்றாள். கருவறை நுழை வாயிலில் ஜெயா மற்றும் விஜயா என்ற துவார தேவிகள் கைகளில் ஆயுதம் தாங்கி நிற்க, கருவறையின் பின்புறமும் பக்கங்களிலும் வினாயகர், தண்டாயுதபாணி, காலபைரவர் மற்றும் சண்டிகேஸ்வரி போன்ற



பல்வேறு பருவங்களில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி மஹா ஸ்வாமிகள்

தெய்வங்களும் உள்ளனர். ஆலயத்தின் வெளிச்சுற்று மண்டபத்தின் வெளியே மேரு ஆலயம் உள்ளது. ஆலய வளாகத்திற்கள் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி ஸ்வாமிகள் பக்தர்களுக்கு தரிசனம் கொடுத்து வந்த மண்டபமும், யாக சாலையும், அன்ன சாலை, கோ மாடம் போன்றவையும் உள்ளன. அது மட்டும் அல்ல கல்வி சாலைகள், திருமண மண்டபம் மற்றும் மருத்துவ மையம் போன்றவையும் அமைக்கப்பட்டு உள்ளன. வருடாவருடம் திருவிழா நடைபெறுகின்றது.

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜெயேந்திரபுரி ஸ்வாமிகள் வாரிசாக நியமிக்கப்பட்டார்

2003 ஆம் ஆண்டு ஆலயத்தின் விமான கோபுரம் தங்க முலாம் பூசப்பட்டு டிஸம்பர் மாதத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன் இரு நாட்களில் அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி ஸ்வாமிகள் தம்முடைய வாரிசாக ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜெயேந்திரபுரி ஸ்வாமிகளை நியமித்து பட்டாபிஷேகமும் செய்தார். பள்ளிப் படிப்பையும் பட்டப் படிப்பையும் முடித்துக் கொண்டு பல மொழிகளையும் கற்றறிந்து பாண்டித்தியம் பெற்ற ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜெயேந்திரபுரி ஸ்வாமிகளுடைய இருபத்தி ஏழாவது வயதில் ஏற்பட்ட திருப்பம் அவரை ஸ்வாமிகளிடம் கொண்டு வந்து சேர்த்தது. எந்த விதமான சடங்கும் இன்றி சன்யாச மார்கத்தில் இணைத்து அவருடைய பெயரை ஜெயேந்திரர் என மாற்றிய ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி ஸ்வாமிகள் அவரையே தன்னுடைய வாரிசாகவும் நியமித்தது பெரும் திருப்பமாக இருந்தது. இன்று ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி ஸ்வாமிகள் நம்மிடையே இல்லை என்றாலும், அவர் விட்டுச் சென்ற பணியை தொய்யாமல் திறன்பட ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜெயேந்திரபுரி ஸ்வாமிகள் நடத்தி வருகின்றார். ஆலயம் வளர்ந்து கொண்டே உள்ளது.



ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜெயேந்திரபுரி ஸ்வாமிகள் மற்றும்
ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி ஸ்வாமிகள்



ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சிவபுரி பாபா , ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருச்சி ஸ்வாமிகள் மற்றும்

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜெயேந்திரபுரி ஸ்வாமிகள்

## ஆலய விலாசம்





**SRI KAILASH ASHRAMA MAHASAMSTHANA**

**Sri Rajarajeshwari Nagar,**

**Bangalore - 560 098.**

**India.**

**Contact Person: - Shri. Hayagreevachar (98450 16754).**

**Tel: - +91 - (080) - 2860 0888 / 0377.**

**Fax: - +91 - (080) - 2860 0633.**

**Website: - http://www.aashiraja.org**

**Email Us at: - info@aashiraja.org**



**நன்றி:** எனது கட்டுரைக்கு முக்கிய ஆதாரமாக இருக்கும் புலவர் மு.பசுமலையரசு எழுதிய 'அருள் மிகு திருச்சி மகா சுவாமிகள் வாழ்வும் ஒளியும்' புத்தகம் மற்றும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜெயேந்திரபுரி ஸ்வாமிகளுடைய ஆசிகள்